# குழந்தைகளுக்கு ஏற்படும் கை, கால் வலிப்பு நோய்

## கே.எம்.சி.எச்.டாக்டர் சுஜாதா சின்னப்பன் விளக்கம்

**கோவை, டிச.27:**குழந்தைகளுக்கு ஏற்படும்கை,கால்வலிப்புநோய் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு கே.எம்.சி.எச்.மருத்துவமனை குழந்தைகள் நலம் மற்றும் கை, கால் வலிப்பு நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர்.சுஜாதா சின்னப்பன் அளித்த பதில்கள்:



டாக்டர் சுஜாதா சின்னப்பன்

*** கை, கால் வலிப்பு நோய் என்றால் என்ன ...**

கை,கால்வலிப்புஒருபொதுவான நரம்பியல் குறைபாடு. ஒரு மனிதனின் மூளையில் ஓராயிரம் மில்லியனுக்கு அதிகமான நியூரான்கள் உள்ளன. இவ்வுறுப்புகளுக்கிடையே சீரான மின்னோட்டம் அலைவு காணப்படுகிறது. இம்மின்னோட்டத்தில் பாதிப்பு ஏற்படுவதால் கை, கால் வலிப்பு நோய் ஏற்படுகிறது.

இந்தியாவில் தற்போதைய கணிப்பின்படி 1.2 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் ஆயிரம் குழந்தைகளில் 3 – 23 குழந்தைகள் கை, கால் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வளரும்நாடுகளில்கை,கால்வலிப்பு குறித்து விழிப்புணர்வு இல்லாததால், இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 90 சதவீதம் பேர் சிகிச்சை எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் சரியான சிகிச்சையின் மூலம் கை, கால் வலிப்பு நோயை கட்டுப்படுத்தலாம்.

***கை, கால் வலிப்பு நோயை கண்டறிவது எப்படி....**

‘இஇஜி’(EEG) பரிசோதனையின் மூலம் மூளையின் எந்த பகுதியில் பாதிப்பு உள்ளது என்று அறிந்து அதற்கேற்ற சிகிச்சை அளிக்கலாம்.

ஆனால் ‘இஜிஜி’ பரிசோதனையில் 40–50 சதவீதம் வலிப்புநோய் உள்ளவர்களுக்கு மட்டும் பாதிப்பு காணப்படும். மற்றும் வலிப்பு நோய் இல்லாத குழந்தைகளுக்கும் 3.5 சதவீதம் ‘இஇஜி’ பரிசோதனையில் பாதிப்பு காணப்படும்.

வலிப்பு நோய் வந்த போது பாதிக்கப்பட்டவர் மற்றும் உடனிருந்தவர் மூலம் கிடைக்கும் தகவல்களின் மூலம் தான் 100 சதவீதம் கை, கால் வலிப்பு நோயை கண்டறிய முடியும். வலிப்பு நோய் உள்ள அனைவருக்கும் ‘எம்ஆர்ஐ ஸ்கேன் (MRI)’ தேவைப்படுவதில்லை. ஆனால் ஒருவருக்கு உடலின் ஒரு பகுதியில் அல்லது ஒரு உறுப்பில் மட்டும் வலிப்பு வந்தால் ‘எம்ஆர்ஐ ஸ்கேன்’ மூலம் மூளை பரிசோதனை செய்ய வேண்டும்.

*** கை, கால் வலிப்பு நோய்க்கான சிகிச்சை ...**

நோயாளியின் வலிப்பை 70 – 80 சதவீதம் மருந்துகள் மூலம் கட்டுப்படுத்த முடியும். 20–30 சதவீதம் நோயாளிகளுக்கு மருந்துகள் எடுத்துக்கொண்டாலும், வலிப்பு தாக்கங்கள் தொடர்ந்து இருக்கும். அவர்களுக்கு நரம்பியல் அறுவை சிகிச்சை, சஞ்சார நரம்புத்தூண்டுதல் (வேகல் நெர்வ் ஸ்டிமுலேஷன்) மற்றும் கீடோஜினிக் (ketogenic) உணவு முறை போன்றபிறசிகிச்சைமுறைகள் உள்ளன.

**மேலும் விபரங்களுக்கு, குழந்தைகள் நலம் மற்றும் கை, கால் வலிப்பு நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர்.சுஜாதா சின்னப்பன், கே.எம்.சி.எச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோயம்புத்தூர். போன் :91 422 4323146, இ-மெயில் :drsujathachinnappan@kmchhospitals.com ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.**

-Advt